# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1977/7 - 2016 ජූලි මස 26 වැනි අඟහරුවාදා - 2016.07.26

1977/7 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், மதுகம பிரதேச செயலாளர் பிரிவில், கீறன்திடிய மற்றும் கொளஹேக்கட கிராமங்களில் அமைந்துள்ள, களுத்துறை மாவட்ட நில அளவையாளர் நாயகத்தினால் அளவீட்டு தயாரிக்கப்பட்ட 2015.06.30 ஆம் திகதிய வரைபடத்தில் துண்டு இல. 4513 எனக் காட்டப்பட்ட 2.5000 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட ஐந்து (05) காணித் துண்டுகள்:

**1. துண்டு இல. 01**

காணியின் பெயர்: பல்லேகொடவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், 03 நிரந்தரக் கட்டிடங்கள், நிரந்தரக் கட்டிடங்களின் பகுதியும் கலப்புப் பயிர்ச் செய்கையும் பற்றாக் காடும் (கொடபறகெலய) காணப்படுகின்றன; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: நமுனுகுல தோட்டக் கம்பனி; விஸ்தீரணம்: 2.4427 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 02**

காணியின் பெயர்: வெல்லபட கும்புர; விபரம்: வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடங்களின் பகுதியும் கலப்புப் பயிர்ச் செய்கையும் காணப்படுகின்றன; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: டீ. எம். விமலசேன மற்றும் இன்னும் சிலர்; விஸ்தீரணம்: 0.0151 ஹெக்டயார்.

**3. துண்டு இல. 03**

காணியின் பெயர்: ராமியவள; விபரம்: தோட்டம், கலப்புப் பயிர்ச் செய்கை காணப்படுகின்றது; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: டீ. எம். விமலசேன மற்றும் இன்னும் சிலர்; விஸ்தீரணம்: 0.0144 ஹெக்டயார்.

**4. துண்டு இல. 04**

காணியின் பெயர்: வல்மிய ஓவிட்ட; விபரம்: தோட்டம், கலப்புப் பயிர்ச் செய்கை காணப்படுகின்றது; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: டீ. எம். விமலசேன மற்றும் இன்னும் சிலர்; விஸ்தீரணம்: 0.0181 ஹெக்டயார்.

**5. துண்டு இல. 05**

காணியின் பெயர்: வல்மிய ஓவிட்ட; விபரம்: தோட்டம், கலப்புப் பயிர்ச் செய்கை காணப்படுகின்றது; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.0097 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு மதுகம பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு

பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சுஜானி மஹேஷா சில்வா,
பிரதேச செயலாளர்,
மதுகம.

பிரதேச செயலகம்,
மதுகம,
2016, யூன் 28.

8 - 199

---

## பிழை திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 3/3/27.
காணி அமைச்சின் இல.: 13/97/PI/46.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1999 ஆம் ஆண்டு யூலை மாதம் 02 ஆந் திகதிய 1086/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் III ஆம் பகுதியின் கீழ் காணி பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான இலக்கம் 07 - 494 அறிவித்தலில், (1) இறுதிக் கிராம வரைபட இல. 1113 இல் பிற்சேர்க்கை இல. 5 துண்டு இல. 50, 51 (2) இறுதிக் கிராம வரைபட இல. 1114 இல் பிற்சேர்க்கை இல. 4 துண்டு இல. 39, 40 (3) இறுதிக் கிராம வரைபட இல. 1109 இல் பிற்சேர்க்கை இல. 9 துண்டு இல. 97, 98, 99 (4) இறுதிக் கிராம வரைபட இல. 1106 இல் பிற்சேர்க்கை இல. 10 துண்டு இல. 79, 80 என்பவற்றிற்காக குறிப்பிடப்பட்ட திகதியை நீக்கி இதற்கு பதிலாக வேறு ஒரு திகதியொன்று பதிலீடு செய்யப்படுவதன் மூலம் அவ் அறிவித்தல் கீழ்வருமாறு திருத்தப்படுகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

| நீக்கப்பட வேண்டிய திகதி | நீக்கப்பட்ட திகதிக்கு பதிலாக பதிலீடு செய்யப்பட வேண்டிய திகதி |
|---|---|
| 1999.08.18 | 2016.09.07 |

எம்.எம்.ஏ.பி. மஹவத்த,
பிரதேச செயலாளர்,
மாவத்தகமை.

பிரதேச செயலாளர் பிரிவு,
மாவத்தகமை,
2016, யூன் 27.

8 - 200